# மாலைக்கதிர்

Maalaikkathir

சாயல் - 03 வள்ளுவர் ஆண்டு 2055 மாசி 19 திங்கட்கிழமை 03.03.2025 கதிர் 142



யாழ் மண்ணிலிருந்து இணைய வெளிக்கு -

Yarl Muttram

Youtube Channel




# செம்மணி மனிதப் புதைகுழி குறித்த விசாரணைக்கு அரசு முழு ஒத்துழைப்பு



## அமைச்சர் சந்திரசேகர் உறுதி

யாழ்ப்பாணம், மார்ச் 03

யாழ். செம்மணி சித்துப் பாத்தி இந்து மயானத்தில் மீட்கப்பட்ட மனித எச்சங்கள் தொடர்பாக நீதிமன்றம் தலையிட்டுள்ள நிலையில், அரசு தேவையான ஒத்துழைப்புக்களை வழங்கும் என யாழ். மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரும் அமைச்சருமான இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்தார்.

சித்துப் பாத்தி மனிதப் புதைகுழி தொடர்பில், அரசு நீதியான விசாரணைக்கு ஒத்துழைக்க வேண்டும் என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்திருந்தார்.

இது தொடர்பில் வினவியபோதே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“மயானத்தில் தகனமேடை அமைப்பதற்காகக் குழி தோண்டப்பட்ட

7 ➤

## உள்ளூராட்சி சபைத் தேர்தல்:

# மார்ச் 17 முதல் வேட்புமனு ஏற்பு




கொழும்பு, மார்ச் 03

உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கான வேட்புமனுக்கள் எதிர்வரும் மார்ச் 17 ஆம் திகதி முதல் 20 ஆம் திகதி நண்பகல் 12 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படவுள்ளது.

இது தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் இன்று வெளியாகியுள்ளது.

உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கான திகதி எதிர்வரும் 20 ஆம் திகதி நண்பகலுக்குப் பின்னர் தேர்தல் ஆணைக் குழுவால் அறிவிக்கப்படவுள்ளது.

7 ➤

# தமிழரசுக் கட்சியுடன் இணைந்து பயணிக்குமா ‘சங்கு’ கூட்டணி?

## சி.வி.கேவுக்கு சித்தர் பதில் கடிதம்



யாழ்ப்பாணம், மார்ச் 03

ஒன்றாக இணைந்து பயணிப்பது தொடர்பில் இலங்கைத் தமிழரசுக் கட்சியிடம் இருந்து சாதகமான பதில்கள் கிடைக்குமானால் அது தொடர்பில் ஜனநாயகத் தமிழ்த்

7 ➤

# இன்று முதல் கட்டுப்பணம் ஏற்பு

## மார்ச் 19 ஆம் திகதி வரை செலுத்த முடியும்



கொழும்பு, மார்ச் 03

உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கான கட்டுப்பணம் இன்று முதல் ஏற்றுக்கொள்ளப் படவுள்ளது.

எதிர்வரும் 19 ஆம் திகதி வரை கட்டுப் பணம் செலுத்த முடியும் என்று தேர்தல் ஆணைக்குழுவால் அறிவிக்கப்பட்டுள்ளது.

7 ➤

# மார்ச் 5 முதல் நாடளாவிய ரீதியில் பணிப்புறக்கணிப்பு அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் அதிரடி தீர்மானம்



கொழும்பு, மார்ச் 03

வைத்தியர்கள் முகங்கொடுத்து வரும் பிரச்சினைகள் தொடர்பில் உரிய தீர்வு காணப்படாத நிலையில் எதிர்வரும் 5 ஆம் திகதி முதல் நாடளாவிய ரீதியில் பணிப் புறக்கணிப் பில் ஈடுபடுவதற்கு அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் தீர்மானித்துள்ளது.

இன்று இடம்பெற்ற

7 ➤

# 197 கிலோ கஞ்சாவுடன் யாழில் இருவர் கைது



யாழ்ப்பாணம், மார்ச் 03

யாழ்ப்பாணம், அனலை தீவுக்கு அண்மித்த கடற்பகுதியில் 197 கிலோ கஞ்சாவைக் கடத்திச் சென்ற இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்

7 ➤

# அரசின் மீது ஏற்பட்டுள்ள சந்தேகம்- இலங்கை பெற்றோலிய விநியோகஸ்தர்கள் சங்கம் குற்றசாட்டு!

கொழும்பு, மார்ச் 03

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான எரிபொருள் நிரப்பு நிலையங்களை வெளிநாட்டு நிறுவனங்களுக்கு மாற்ற அரசாங்கம் முயற்சிப்பதாக சந்தேகம் எழுந்துள்ளதாக இலங்கை பெற்றோலிய விநியோகஸ்தர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

இதற்காக அரசாங்கம் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வருவதாக தெரிவித்த பெற்றோலிய விநியோகஸ்தர்கள் சங்கத்தின் துணைத் தலைவர் குசும் சதநாயகே, இன்று (03) காலை ஜனாதிபதி செயலகத்திற்குச் சென்று எரிபொருள் நிரப்பு நிலைய உரிமையாளர்களின் 3 சதவீத கழிவுக் கொடுப்பனவு குறைப்பு தொடர்பான மகஜர் ஒன்றை கையளிக்கவுள்ளதாகவும் தெரிவித்தார்.

இதற்கிடையில், லங்கா இந்தியன் ஒயில் நிறுவனத்தின் விநியோகஸ்தர்களும் எரிபொருள் முன்பதிவுகளை நிறுத்தி வைக்க முடிவு செய்துள்ளனர்.

பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் செல்வாக்கு காரணமாக, ஒரு ஆர்டருக்கு 35,000 நட்டம் ஏற்படுவதாக அதன் தலைவர் கோசல விதானராச்சி தெரிவித்தார்.

எவ்வாறாயினும், நாட்டில் போதுமான அளவு எரிபொருள் கையிருப்பு இருப்பதாக இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

எதிர்வரும் ஒகஸ்ட் மாதம் வரை எரிபொருள் கையிருப்பு வைக்க உத்தரவிடப்பட்டுள்ளதாக அதன் தலைவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

நேற்று 1,500க்கும் மேற்பட்ட எரிபொருள் பதிவுகள் பெறப்பட்டுள்ளதுடன்,. பெற்றோலிய இருப்புக்கள் விநியோகிக்கப்படுவதாகவும் தெரிவிக்ககப்பட்டுள்ளது.

தற்போதுள்ள பிரச்சினைகள் குறித்து எரிபொருள் விநியோகஸ்தர்கள் மற்றும் அரசாங்க பிரதிநிதிகளுக்கு இடையே நாளை கலந்துரையாடல் நடைபெறவுள்ளது.

இதன்படி, படி நாளை காலை 9.00 மணிக்கு கலந்துரையாடலில் பங்கேற்பதாக பெற்றோலிய விநியோகஸ்தர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

இதற்கிடையில், எண்ணெய் விநியோகம் தொடர்பாக எழுந்துள்ள பிரச்சினையை கட்டுப்படுத்த அரசாங்கத்திற்கு தொலைநோக்கு பார்வை இல்லை என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச குறிப்பிட்டார். நொச்சியாகம பகுதியில் நடைபெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச இவ்வாறு தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# எரிபொருள் தட்டுப்பாடு நிலை திட்டமிட்டு உருவாக்கப்பட்டுள்ளது- நளிந்த ஜயதிஸ்ஸ!

கொழும்பு, மார்ச் 03

எரிபொருள் நிலையங்களுக்கு தேவையான எரிபொருள் தொடர்ச்சியாக எவ்வித தடையும் இன்றி விநியோகிக்கப்படுகிற போதிலும், எரிபொருள் நிலையத்தின் உரிமையாளர்களே எரிபொருள் தட்டுப்பாடு நிலையை திட்டமிட்டு உருவாக்கியுள்ளனர் என அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ குறிப்பிட்டார்.

மீண்டும் நாட்டில் எரிபொருளுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதா? என ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதில் அளிக்கும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார். இது தொடர்பில் அவர் கூறுகையில்,

நாட்டில் எரிபொருளுக்கு தட்டுபாடு ஏற்பட்டுள்ளமையால் மீண்டும் எரிபொருள் நிலையங்களில் வாகனங்கள் வரிசையில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கின்றனர். எனினும் அனைத்து எரிபொருள் நிலையங்களுக்கும் தேவையான எரிபொருள் தொடர்ச்சியாக எவ்வித தடையும் இன்றி விநியோகிக்கப்படுகிறது.

எவ்வாறாயினும் மாத இறுதியில் எரிபொருள் விலை அதிகரிக்கலாம் என்பதற்காக ஒரு சில எரிபொருள் நிலையங்களில் வரிசைகள் உருவாகியுள்ளன.

ஊடகங்கள் மற்றும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் நாட்டில் எரிபொருளுக்கு பற்றாக்குறை நிலவி வருவதாக பொதுமக்களை அச்சுறுத்தி வருகின்றனர்.

சில பகுதிகளில் எரிபொருள் பற்றாக்குறை ஏற்பட்டமைத் தொடர்பில் தெரியவந்ததை அடுத்து விரைந்து அப்பிரச்சினைக்கு தீர்வு காணப்பட்டது.

எனினும் தற்போது எவ்வித சிக்கலும் இல்லை. அவசியமான எரிபொருள் எம்மிடம் உள்ளது. கடந்த அரசாங்கங்களில் அமைச்சுப் பதவியை வகித்தவர்கள் மற்றும் அவர்ளுடன் தொடர்புடையோருக்கு சொந்தமாக பல எரிபொருள் நிலையங்கள் உள்ளன.

அதை இந்நாட்டு மக்கள் நன்கு அறிவார்கள். எரிபொருள் நிலையத்தின் உரிமையாளர்கள் திட்டமிட்டு இவ்வாறானதொரு நிலையை உருவாக்கியுள்ளனர். எரிபொருள் கூட்டுத்தாபனத்துடன் இவ்விடயம் தொடர்பில் கலந்துரையாட உள்ளோம்.

எரிபொருள் கூட்டுத்தாபனம் பொதுமக்களுக்கான சேவையை வழங்கும் நிறுவனமாகும். மக்களின் பெரும்பான்மை ஆனையை பொறுப்பேற்று அரசாங்கம் செயல்படுகிறது. ஏனைய சிறு குழுக்களின் செயல்களைக் கண்டு அச்சம் கொள்ளத் தேவையில்லை என்று தெரிவித்தார்.

SUHATHEHAM ATHULARSAALAI (PVT) LTD
சுகதேகம் ஆதுலர்சாலை (பீவீட) எல்டீடி
Neithal Beach city, Navatkuli, Jaffna
Company No- PV0031448

சித்த, ஆயுர்வேத, மேற்கத்ய இணைந்த மருத்துவ சேவை

Opening Hours - 9.00 am - 5.00 pm
Monday - Saturday

Treatment for Following Diseases

- Joint disorders சகல விதமான மூட்டுவாதங்கள்
- Paralysis பாரிசவாதம்
- Skin diseases தோல் நோய்கள்
- obesity உடற்பருமன்
- Gynecological problems - பெண்ணியல் நோய்கள்
- A norectal diseases மூல வருத்தம்
- Diabetic Mellitus நீரிழிவு
- Diabetic foot ulcers - நீரிழிவு புண்கள்
- Vericose vein Kidney stone சிறுநீரககல்
- Hypertension உயர்குருதியமுக்கம்
- cholesterol கொலஸ்திரோல்
- GGIT disorders சமிபாட்டுத் தொகுதியுடன் தொடர்பான நோய்கள்

இலவச மருத்துவ முகாம்
* போயா தினங்களில் காலை 9 மணி தொடக்கம் மாலை 5.30 மணி வரை நடைபெறும்.
* இலவசமாக குருதியமுக்கம் நிமை, உயரம், உடற்திணிவுச்சுட்டி என்பவற்றை அளவிட முடியும்

Special Treatments

- Full body Therapy
- Head Massage
- Foot Massage -
- Herbal Medicated Bath
- Decoction Bath
- Shirod hara
- skin care therapy
- Nasya
- wellness treatment through yoga & counselling
- Leech Therapy

அனைத்து விதமான குழந்தைகளுக்கான மூலிகைத் தாவரங்கள், கோரோசனை மாத்திரைகள், கிரந்தி எண்ணை என்பனவனற்றை இங்கு பெற்றுக்கொள்ளலாம்

Other activities ஏனைய சேவைகள்
Nursery Garden -
Medicinal Plants (மூலிகை தாவரங்கள்)
Medicinal leach (லீச் அட்டை வளர்ப்பு)

Neithal Beach city
Amman Kovil Road,
Navatkuli Jafina

Contact No-0762942218

# மாணவர்களை ஏற்றிச் சென்ற வான் விபத்து!

கொழும்பு, மார்ச் 03

குருவிட்ட பொலிஸ் பிரிவின் அடவிகந்த பகுதியில் பாடசாலை மாணவர்களை ஏற்றிச் சென்ற வான் ஒன்று விபத்துக்குள்ளானதில் 14 பேர் காயமடைந்துள்ளதாக குருவிட்ட பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்து இன்று (03) காலை 6 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

வேன் வேக கட்டுப்பாட்டை இழந்து வீதிக்கு அருகிலுள்ள மரத்தில் மோதியதில் குறித்த விபத்து ஏற்பட்டுள்ளது.

விபத்தின் போது, வேனில் இருந்த 14 மாணவர்களும், சாரதியும் காயமடைந்ததில் சிகிச்சைகளுக்காக எரத்த கிராமிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட 10 மாண-வர்கள் சிகிச்சை பெற்று வீடு திரும்பியுள்ளதாகவும், இரண்டு மாணவர்களும், இரண்டு மாணவிகளும்




வேனின் சாரதியும் மேலதிக சிகிச்சைக்காக இரத்தினபுரி வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்து தொடர்பிலான மேலதிக விசாரணைகளை குருவிட்ட பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



## மீண்டும் மொட்டுக் கட்சியில் லக்ஷ்மண் யாப்பா!

கொழும்பு, மார்ச் 03

வடமேல் மாகாணம் மற்றும் தென் மாகாணத்தில் முன்னாள் ஆளுநராக இருந்த லக்ஷ்மண் யாப்பா அபேவர்த்தன ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுண கட்சியில் மீண்டும் இணைந்து கொண்டுள்ளார். கடந்த ஜனாதிபதித் தேர்தலில் மொட்டுக் கட்சியில் இருந்து விலகி, முன்னாள் ஜனாதிபதி ரணிலுக்கு ஆதரவாக பிரசாரம் மேற்கொண்டிருந்தார்.

கடந்த பொதுத் தேர்தலின் பின்னர் அரசியலை விட்டு ஒதுங்குவதாக அறிவித்த லக்ஷ்மண் யாப்பா, தற்போது மொட்டுக் கட்சியில் மீண்டும் இணைந்து கொண்டுள்ளதுடன் அக்கட்சியின் மாத்தறை மாவட்ட தலைவராகவும் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.



## அரசாங்கத்திடம் நாமல் எம்.பி விடுத்துள்ள கோரிக்கை!

கொழும்பு, மார்ச் 03

நாடாளுமன்ற சிறப்புரிமைகளை துஷ்பிரயோகம் செய்து நாடாளுமன்றத்தில் பொய்யான அறிக்கைகள் வெளியிடப்படுவதைத் தடுக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும். அவ்வாறு எடுக்காவிட்டால், அதைத் தடுக்க தனிநபர் பிரேரணையைக் கொண்டு வருவேன் என நாடா-ளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற நிகழ்ச்சி-க்குப் பிறகு ஊடகங்களுக்குப் பேசிய அவர், தவறான அறிக்கைகளை வெளியிட விரும்பாத அனைவரும் இந்த பிரேரணைக்கு வாக்களிப்-பார்கள் எனவும் சுட்டிக்காட்டினார்.

## யானைகளால் ரயில் நேரங்களில் அதிரடி மாற்றம்

கொழும்பு, மார்ச் 03

இரவு நேரங்களில் ஓடும் ரயில்களில் காட்டு யானைகள் மோதுவதை தடுக்க ரயில்வே துறை நீண்ட கால மற்றும் குறுகிய கால நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

முதல் கட்டமாக, காட்டு யானைகள் நடமாட்டம் உள்ள பகுதிகளில் ரயில் வேகத்தை குறைக்க, அந்த பகுதிகளுக்கு குறைந்த வேக வரம்பை வழங்குவதன் மூலம் ரயில்வே துறை ரயில் அட்டவணையை திருத்தியுள்ளது.

காட்டு யானைகள்நடமாட்டம் உள்ள காலங்களில் ரயில் வே-கத்தை குறைக்க, சம்பந்தப்பட்ட பகுதிகளில் காட்டு யானைகள் நடமாட்டம் உள்ள காலங்களுக்கு முன்னும் பின்னும் ரயில்களை இயக்க, ரயில்வே துறை ரயில் தொடக்க நேரங்களையும் திருத்தியுள்ளது.

அதன்படி, மட்டக்களப்பு பாதையில் பளுகஸ்வெவ முதல் ஹிங்குராக்கொட வரையிலும், வெலிகந்த முதல் புனானி வரையிலும், திருகோண-மலை பாதையில் கல்ஓயா சந்தி முதல் கந்தளாய் வ-ரையிலும் உள்ள பகுதிகளைப் பாதிக்கும் வகையில் ரயில் நேர அட்டவணைகள் திருத்தப்பட்டு, 2025 மார்ச் 07 முதல் செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.



மேலும், அந்த திகதியிலிருந்து கொழும்பு கோட்டைக்கும் மட்டக்களப்புக்கும் இடையில் இயங்கும் "மீனகாயா" இரவு நேர அஞ்சல் ரயிலுக்கு எஸ்-13 வகை பவர் ரயிலை இயக்க திட்டமிடப்பட்டுள்ளது.

07.03.2025 முதல் வரவிருக்கும் திகதிகளுக்கு முன்பதிவு செய்த பயணிகள், திட்டமிட்டபடி சம்பந்தப்பட்ட ரயில்களுக்கு சரியான நேரத்தில் வந்து சேருமாறு ரயில்வே திணைக்களம் கேட்டுக்கொண்டுள்ளது..

மேலே குறிப்பிட்டுள்ளபடி ரயில்களின் தொடக்க நேர-ங்கள் திருத்தப்பட்டதாலும், வேகக் கட்டுப்பாடுகள் விதி-க்கப்பட்டதா லும் ரயில் நிலை-யங்களை அடைவதில்கூடுதல் நேரத்தை செலவிட வேண்டியிருப்ப தற்கு ரயில்வே துறை தனது வருத்தத்தை தெரிவித்துக் கொள்கிறது. காட்டு யானை-களைப் பாது காப்பதை ரயில்வே துறை ஒரு தேசியப் பொறுப்பாக கருதி நடவடிக்கை எடுத்து வருகிறது என்பதை மேலும் தெரிவித்துக் கொள்கிறேன்.

07.03.2025 முதல் திருத்-தப்பட்ட ரயில் புறப்படும் மற்றும் சேருமிடம் நேரங்கள் இதன் மூலம் வழங்கப்படுகின்றன.

6011 (கொழும்பு கோட்டை - மட்டக்களப்பு) "உதய தேவி"
கொழும்பு கோட்டையிலிருந்து புறப்படும் நேரம் காலை 06:05 மணி
மட்டக்களப்புக்கு வருகை மாலை 14 : 49 மணி

6075 (கொழும்பு கோட்டை - மட்டக்களப்பு) "புலதிசி"
கொழும்பு கோட்டையிலிருந்து புறப்படும் நேரம் மாலை 15:15 மணி
மட்டக்களப்புக்கு வருகை இரவு 12 : 03 மணி

6079 (கொழும்பு கோட்டை - மட்டக்களப்பு) "மீனகயா"
கொழும்பு கோட்டையிலிருந்து புறப்படும் நேரம் இரவு 23.00 மணி
மட்டக்களப்புக்கு வருகை காலை 08.28 மணி

6012 (மட்டக்களப்பு - கொழும்பு கோட்டை) "உதய தேவி"
மட்டக்களப்பிலிருந்து புற-ப்படும் நேரம் காலை 06:10 மணி
கொழும்பு கோட்டைக்கு வருகை மாலை 14: 53

6076 (மட்டக்களப்பு - கொழும்பு கோட்டை) "புலதிசி"
மட்டக்களப்பிலிருந்து புறப்படும் நேரம் அதிகாலை 01:30 மணி
கொழும்பு கோட்டைக்கு வருகை காலை 10:10 மணி

6080 (மட்டக்களப்பு - கொழும்பு கோட்டை) "மீனகாயா"
மட்டக்களப்பிலிருந்து புறப்படும் நேரம் மாலை 18:15 மணி
கொழும்பு கோட்டைக்கு வருகை அதிகாலை 03:30 மணி

7083 (கொழும்பு கோட்டை - திருகோணமலை)
கொழும்பு கோட்டையில-ிருந்து புறப்படும் நேரம் இரவு 21 : 30
திருகோணமலைக்கு வருகை காலை 06: 08

7084 (திருகோணமலை - கொழும்பு கோட்டை)
திருகோணமலையிலிருந்து புறப்படும் நேரம் மாலை 18:30
கொழும்பு கோட்டைக்கு வருகை அதிகாலை 03: 19 (ஐ)

## மன்னாரில் 12 மில்லியன்பெறுமதியான கேரள கஞ்சாவுடன் ஒருவர் கைது



கொழும்பு, மார்ச் 03

கடற்படை புலனாய்வு பிரிவு உத்தியோகத்தர்களுக்கு கிடை-க்கப்பெற்ற இரகசிய தகவலின் பிரகாரம்,மன்னார் மாவட்ட குற்ற-த்தடுப்பு பிரிவு பொலிஸ் உத்திே-யாகத்தர்கள் மன்னார்-சிலாவ-த்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட யாசீம் சிற்றி பகுதியில் வைத்து ஞாயிற்றுக்கிழமை மாலை ஒரு தொகுதி கேரள கஞ்சா பொதிகள் மீட்கப்பட்டுள்ளதோடு,சந்தேக நபர் ஒருவரையும் கைது செய்துள்ளனர்.

மீட்கப்பட்ட கேரள கஞ்சா 31 கிலோ 62 கிராம் எடை கொண்டது என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மன்னார் மாவட்ட சிரேஷ்ட பொ-லிஸ் அத்தியட்சகர் எல்.வை.ஏ.எஸ். சந்திரபால வின் பணிப்பில்,உதவி பொலிஸ் அத்தியட்சகர் (2)போதி பக்ஸ என்பவரின் வழிகாட்டலில் மன்னார் மாவட்ட குற்றத்தடுப்பு தற்காலிக பொறுப்பதிகாரி பொ.ப .மதுரங்க,பொ.சா.74927 குணசிங்க தலைமையிலான அணியினரே மேற்படி கேரள கஞ்சா 31 கிலோ 62 கிராம் சந்தேக நபர் ஒருவை-ரயும் கைது செய்து உள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் சவரிபுரம்,சிலாவத்துறை பகுதியை சேர்ந்த 47 வயதுடையவர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் மற்றும் வழக்கு பொருட்கள் மேலதிக விசாரணையின் பின் மன்னார் நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்படவுள்ளதாக மன்னா-ார் மாவட்ட குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ஐ)

# சீமான் மீதான பாலியல் வழக்கு விசாரணை தடை விதித்தது சுப்ரீம் கோர்ட்







நாம்தமிழர்கட்சிதலைமை ஒருங்கிணைப்பாளர் சீமானுக்கு எதிரான பாலியல் துன்புறுத்தல் புகார் வழக்கின் விசாரணைக்கு சுப்ரீம் கோர்ட் இடைக்கால தடை விதித்தது.

நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளரான சீமான், தன்னை திருமணம் செய்து கொள்வதாக வாக்குறுதி அளித்து, தன்னுடன் பாலியல் உறவு வைத்து, பிறகு ஏமாற்றியதாக நடிகை விஜயலட்சுமி போலீசில் புகார் அளித்தி ருந்தார் இதன் அடிப்படையில் சீமானுக்கு எத ி ராக வழக்கு பதிவு செய்யப்பட்டது. இந்த வழக்கு நீண்ட காலமாக நிலுவையில் இருந்தது. இந்த வழக்கை முடித்து வைக்க வேண்டும் என்று கோரி, சென்னை உயர்நீதிமன்றத்தில் சீமான் வழக்கு தொடர்ந்தார்.

மனுவை விசாரித்த சென்னை உயர் நீதி மன்றம், சீமான் மீதான வழக்கை ரத்து செய்ய மறுப்பு தெரிவித்ததுடன், சீமான் மீதான குற்றச்சாட்டுகள் மிகவும் தீவிரமானது என கருத்து கூறியிருந்தது. மேலும், வழக்கை 12 வாரத்திற்குள் முடிக்கவும் போலீசாருக்கு உத்தரவு பிறப்பித்திருந்தது.

இதையடுத்து வழக்கு விசாரணை வேகம் பிடித்தது. போலீசார், சீமானுக்கு சம்மன் அனுப்பி ஸ்டேஷனுக்கு வரவழைத்தனர். விஜயலட்சுமியிடமும் வாக்குமூலம் பெற்றுள்ளனர். வீட்டில் சம்மன் ஒட்டச்சென்றபோது, போலீசாருக்கும், சீமான் வீட்டு ஊழியர்களுக்கும் மோதல் ஏற்பட்டு இருவர் கைது செய்யப்பட்ட சம்பவமும் நடந்தது. இதையடுத்து, தன் மீதான வழக்கு விசாரணைக்கு இடைக்கால தடை கோரி, சீமான் உச்சநீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தார். இந்த வழக்கு இன்று (மார்ச் 03) சுப்ரீம் கோர்ட்டில் விசாரணைக்கு வந்தது.

அப்போது, 'புகார் அளித்த நடிகை இதற்கு முன் மூன்று முறை வழக்கை திரும்ப பெற்றுள்ளார். புதிய அரசு பொறுப்பேற்றுடன் அரசியல் காரணமாக வழக்கு விசாரணை மீண்டும் தொடங்கப்பட்டுள்ளது. இதற்கு இடைக்கால தடை விதிக்க வேண்டும்' என சீமான் தரப்பில் வாதிடப்பட்டது.

பின்னர் நீதிபதிகள், சீமானுக்கு எதிரான பாலியல் துன்புறுத்தல் புகார் வழக்கின் விசாரணைக்கு இடைக்கால தடை விதித்தனர். 'இந்த வழக்கில் எதிர்மனுதாரர் பதிலளிக்க வேண்டும்' என நீதிபதிகள் உத்தரவிட்டனர்.

இது குறித்து மதுரையில் நிருபர்கள் சந்திப்பில் சீமான் கூறியதாவது: நடிகையுடன் பேச்சு வார்த்தைக்கு வாய்ப்பு இல்லை, தேவையில்லை. இந்த வழக்கு எப்படி பார்த்தாலும் அவதூறு, பொய் என்று தான் முடிவு. நீதிமன்றத்தின் இடைக்காலத் தடையை வரவேற்கிறேன். சட்டப்படி செயல்படுவோம். இந்த தடையை நாம் விரும்பி கேட்டது தான்.

உயர்நீதிமன்றத்திலேயே நாங்கள் தான் வழக்கை தொடர்ந்தோம். ஒரு முறை திருமணம் செய்வதாக கூறி ஏமாற்றியதாக சொல்கிறீர்கள். மறுபுறம் 3வது முறையாக வழக்கு தொடரும் போது திருமணம் நடந்து முடிந்தது என்று சொல்கிறீர்கள். 6 மாதத்தில் 7 முறை கரு கலைத்ததாக சொல்கிறீர்கள். 6 மாதத்தில் 7 முறை கரு கலைத்தேன் என்றால் அரிதிலும் அரிதான அவதார பிறவியாக தான் இருக்க வேண்டும்.

இந்த வழக்கை முற்றிலுமாக அழிக்க தான் முயற்சி செய்வோம். விசாரித்தாலும் எதிர்கொள்ள தயாராக தான் இருக்கிறேன். எனக்கு ஏற்பட்ட இந்த நிலைமை இந்திய நிலத்தில் இனி எந்த மகனுக்கும் வர கூடாது. என்னை நம்பி இருக்கிறவர்கள் எல்லாம் சிறிய பிள்ளைகள். இதனால் தான் வழக்கை முற்றுப்புள்ளி வைக்க நினைக்கிறேன். இவ்வாறு சீமான் கூறினார். (ஐ)





## சிங்கத்தை கமராவில் 'க்ளிக்' செய்த பிரதமர் மோடி: உலக வனவிலங்கு நாளில் உற்சாகம்!

கிர் வனவிலங்கு சரணாலயம் சென்ற பிரதமர் மோடி அங்கு சிங்கங்களை மிக அருகில் பார்க்கும் லயன் சபாரி மேற்கொண்டு கேமராவில் அவற்றை படம் பிடித்தார்.

குஜராத் மாநிலத்தில் 2 நாட்கள் பிரதமர் மோடி பயணம் மேற்கொண்டுள்ளார். இன்று (மார்ச். 3) சர்வதேச வனவிலங்கு நாள் என்பதால் அங்குள்ள கிர் தேசிய வனவிலங்கு சரணாலயம் சென்றார்.

உலக நாடுகளில் ஆசிய சிங்கங்களின் ஒரே வாழ்விடம் என்ற பெருமையை பெற்றுள்ள கிர் சரணாலயத்தில் வனவிலங்குகளை அருகில் இருந்து பார்த்து ரசிக்கும் லயன் சவாரி (டுழைெ ளயகயசை) என்ற பயணத்தை மேற்கொண்டார்.

அதற்காக அவர் திறந்தவெளி ஜீப்பில் சென்றார். கேமரா மூலம், வனவிலங்கு சரணாலயத்தில் நடமாடிய சிங்கத்தை போட்டோ எடுத்து மகிழ்ந்தார். கேமராவில் க்ளிக்கிய போட்டோக்களை பிரதமர் மோடி, தமது எக்ஸ் தள வலை பக்கத்தில் பதிவிட்டு கூறி உள்ளதாவது இன்று உலக வனவிலங்கு நாள் என்பதால் கம்பீரமான ஆசிய சிங்கங்களின் தாயகம் கிர் வனப்பகுதியில் லயன் சபாரி சென்றேன். நான் குஜராத் முதல்வராக இருந்து இங்கே வந்த போது செய்த பல பணிகள் இப்போது நினைவுக்கு வருகிறது.

கடந்த காலங்களில் மேற்கொண்ட நடவடிக்கைகள் மூலம், சிங்கங்களின் எண்ணிக்கை கணிசமாக உயர்ந்துள்ளதை உறுதி செய்ய முடிகிறது. ஆசிய சிங்கங்களின் வாழ்விடத்தை பாதுகாப்பதில் பழங்குடி சமூகத்தினர், அவர்களை சுற்றியுள்ள பகுதிகளில் வசிக்கும் பெண்களின் பங்கு பாராட்டத்தக்கது. இவ்வாறு பிரதமர் மோடி பதிவிட்டுள்ளார். (ஐ)

## அரசியலால் தமிழகத்தில் கல்வி கொள்கைக்கு எதிர்ப்பு



*''தேசிய கல்வி கொள்கை ஹிந்தியை திணிக்கவில்லை. அரசியல் காரணங்களுக்காக தமிழகத்தில் எதிர்ப்பு தெரிவிக்கின்றனர்,'' என, மத்திய கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதான் குறிப்பிட்டார்.*

*தேசிய கல்வி கொள்கை வாயிலாக தமிழகத்தில் ஹிந்தியை திணிக்க முயற்சிப்பதாக, ஆளும் தி.மு.க., தொடர்ந்து எதிர்ப்பு தெரிவித்து வருகிறது.*

*இந்நிலையில், டில்லியில் நேற்று நிருபர்களின் கேள்விகளுக்கு பதிலளித்து, பா.ஜ.,வைச் சேர்ந்த மத்திய கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதான் கூறியுள்ளதாவது: தேசிய கல்வி கொள்கையில் எந்த இடத்திலும், ஹிந்தியை மட்டும் படிக்க வேண்டும் என்று கூறவில்லை. தாய்மொழியில் கல்வி கற்பதையே தேசிய கல்வி கொள்கை வலியுறுத்துகிறது. தமிழகத்தில் தமிழில் பாடம் நடத்தப்பட வேண்டும் அதனுடன் வேறு ஒரு இந்திய மொழியை கற்பிக்க வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது.*

*ஹிந்தி, தமிழ், ஒடியா, பஞ்சாபி என, அனைத்து மொழிகளின் வளர்ச்சியை கல்வி கொள்கை ஊக்குவிக்கிறது. அதன்படி, அனைத்து மொழிகளும் சமமாக பார்க்கப்படுகின்றன. ஹிந்தியை திணிக்கவில்லை. ஆனால், அரசியல் காரணங்களுக்காக மட்டுமே தமிழகத்தில் உள்ள சிலர் எதிர்ப்பு தெரிவிக்கின்றனர். இவ்வாறு அவர் கூறினார். (ஐ)*

## ஹரியானாவில் காங்கிரஸ் பெண் தொண்டர் கொலை வழக்கில், ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

ஹரியானாவின் ரோதக் மாவட்டத்தில் உள்ள பஸ் நிலையம் அருகே சூட்கேஸில், ஒரு இளம் பெண் உடல் கண்டெடுக்கப்பட்டது. தகவல் அறிந்து சம்பவ இடத்திற்கு போலீசார், மற்றும் தடயவியல் நிபுணர்கள் விரைந்தனர். இது குறித்த போலீசார் நடத்திய விசாரணையில் காங்கிரஸ் கட்சியின் 22 வயது பெண் நிர்வாகி ஹிமானி நர்வாலின் உடல் என்பது தெரியவந்தது. இது குறித்து போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தினர். இது குறித்து விசாரிக்க தனிப்படை ஒன்றும் அமைக்கப்பட்டு இருந்தது.

ஒரு குற்றவாளி கைது செய்யப்பட்ட உடனேயே, ஹிமானியின் குடும்பத்தினர் மரண தண்டனை கோரினர், மேலும் அவரது உடல் இன்று தகனம் செய்யப்படும் என்றும் கூறினர். இது குறித்து ஹிமானியின் சகோதரர் ஜதின் கூறியதாவது: ஒரு குற்றவாளி கைது செய்யப்பட்டுள்ளார். இன்று அவரது உடல் (ஹிமானி நர்வால்) தகனம் செய்வோம்.





ஊடகங்களில் நிறைய வதந்திகள் பரவி வருகின்றன. எங்களுக்கு நீதி கிடைக்கும். குற்றம் சாட்டப்பட்டவர் யார் என்பது எங்களுக்கு இன்னும் தெரியவில்லை் போலீசார் எங்களுக்கு எந்த தகவலும் கொடுக்க வில்லை. குற்றம் சாட்டப்பட்டவருக்கு மரண தண்டனை விதிக்க வேண்டும் என்று நாங்கள் விரும்புகிறோம், என்றார். (ஐ)



தனக்கான அடையாளத்தை நோக்கி ஒவ்வோர் அடி எடுத்து வைக்கும் போதும் பெண்கள் பல முறை வீழ்த்தப் படுவார்கள். பெண்களின் திறமையும், வலிமையும், துணிவும் எப்போதும் கேள்விக்கு உள்ளாக்கப்படும். இவை அனைத்தையும் புறந்தள்ளிவிட்டு தன் னம்பிக்கையுடன் நகரும்போது வலுவான சுதந்திரமான பெண்களாக உருவெடுக்கிறார்கள்.

# பெண்களும் அடையாளங்களும்!

உங்கள் பக்கத்து வீட்டுப் பெண்மணியை நீங்கள் எவ்வாறு அழைப்பீர்கள்? நிவேதா அம்மா அல்லது அஸ்வின் அம்மா என்று பிள்ளைகளின் பெயர்களை வைத்து அழைப்பீர்களா? அல்லது நேரடியாக அந்தப் பெண்களின் பெயர்களைக் கொண்டு அழைப்பீர்களா? அந்த வீட்டு ஆண்கள் எவ்விதம் அறியப்படுகிறார்கள்? இன்ஸ்பெக்டர், புரோபஸர், இஞ்சினியர், டொக்ரர் என்று அடையாளப்படுத்தப் படுகிறார்களா?

அறுபதுகளில்தெருக்கள்மட்டும்அல்ல, குடும்பங்கள்கூடச் சாதியைக் கொண்டே அடையாளம் காணப்பட்டு வந்தன. பின்னர் வந்த தலைமுறையில் பெரும்பாலும் ஆணின் வேலையின் தன்மையைக் கொண்டே அறியப்பட்டு வந்தன. டொக்டர் வீடு, பொலீஸ்கார் வீடு என்று ஆண்களின் தொழிலை அடையாளப்படுத்தி குடும்பங்கள் அறியப்பட்டன. பெண்களின் வேலையைக் கொண்டோ அல்லது சாதியைக் கொண்டோ எந்த அடையாளத்தையும் இந்தச் சமூகம் ஏற்படுத்தவே இல்லை. அந்தக் குடும்பத் தலைவர் இறந்தே போய் இருந்தாலும்கூட அந்த வீடு ஆணின் தொழிலை அடையாளப்படுத்தி மட்டுமே அறியப்படும்.

சுமார் 25 வருடங்களுக்கு முன் 'சித்தி' என்று ஒரு தொலைக்காட்சித் தொடர் ஒலிபரப்பானது. அந்தத் தொடரில் வரும் சித்தி எல்லா உறவு முறையினராலும் சித்தி என்றே அழைக்கப்படுவார். அதற்குப் பிறகு 'அண்ணி' என்று ஒரு தொடர் வந்தது. அவரும் அனைவராலும் அண்ணி என்றே அழைக்கப்படுவார். சரி, உறவுமுறை விளித்தல்களைக் கடந்து உண்மையில் குடும்பங்களில் பெண்களின் அடையாளம் என்ன? எந்த அடையாளத்தைக் கொண்டு பெண்கள் சமூகத்தில் அறியப்படுகிறார்கள்?

இந்திய மாநிலங்களவை சபாநாயகர் ஜெகதீப் தங்கருக்கும் ஜெயா பாதுரி பச்சனுக்கும் இடையே மாநிலங்களவையில் நடந்த விவாதத்தை இதற்கு உதாரணமாகச் சொல்லலாம். ஜெயா பாதுரி பச்சன் இந்தித் திரைப்படக் கலைஞர், அரசியலாளர். சிறந்த நடிகை எனப் பாராட்டப்பட்டு 8 ஃபிலிம்பேர் விருதுகளைப் பெற்றுள்ளார். 2007 ஆம் ஆண்டில் ஃபிலிம்பேர் வாழ்நாள் சாதனை விருது இவருக்கு வழங்கப்பட்டது. 1992இல் பத்மஸ்ரீ விருது பெற்றார். நான்கு மொழிகளில் ஐம்பதுக்கும் மேற்பட்ட திரைப்படங்களில் நடித்துள்ளார்.

மாநிலங்களவையில் அவரை அழைக்கும் போது ஜெயா அமிதாப்பச்சன் என்று அவைத் தலைவர் ஜெகதீப் தங்கர் குறிப்பிடுகிறார். தன்னை ஜெயா பச்சன் என்று அழைத்தால் போதுமானது என்று ஜெயா பச்சன் தெளிவாக எடுத்துரைத்த பின்னும்,அவைத் தலைவர் மீண்டும் ஜெயா அமிதாப் பச்சன் என்றே அழைக் கிறார். தனக்கென ஓர் அடையாளம் உள்ளது என்று ஜெயா பச்சன் தெளிவுபடுத்திய பின்னும் அவர் அப்படியே குறிப்பிடுகிறார். ஜெயா பச்சன், அமிதாப் பச்சனின் மனைவியாக மட்டும்தான் அறியப்பட வேண்டும் என்று ஜெகதீப் தங்கர் நினைக்கிறார். ஜெகதீப் தங்கரின் இந்தச் சிந்தனைக்கு அடித்தளம் என்ன? பெண்கள் தனித்துவமான திறமைகளையும் சாதனைகளையும் கொண்டிருந்தாலும்கூட, ஏன் அவர்கள் எப்போதும் ஓர் ஆணின் மூலமாகவே அறியப்பட வேண்டும்? இன்னாருடைய மகள், இன்னாரின் மனைவி, இவருடைய தாய் என்று மட்டுமே அறியப்பட வேண்டிய அவசியம் என்ன? தனக்கென ஓர் அடையாளத்தை உருவாக்கிக் கொள்ளும் பெண்களையே அப்படி அடையாளப்படுத்துவதில் தயக்கம் காட்டுகிறது இந்தச் சமூகம்.

ஆண்கள் செய்யும் வேலையின் தரம் மட்டும் உயர்ந்ததாகக் கருதப்படுகிறது. அதே வேலையைப் பெண்கள் செய்தால் சற்றுக் குறைவாகவே பார்க்கப் படுகிறது. சமமான பங்களிப்பைப் பெண்கள் அளிததாலும்கூட இரண்டாம் நிலை கதாபாத்திரமாகவே கருதப்படுகின்றனர். எல்லாத் துறைகளிலும் பெண்கள் தங்கள் இருப்பை உறுதி செய்துள்ளனர். தங்கள் தனித்துவத்தைப் பதிவு செய்துள்ளனர். ஆனால், சமுதாயத்தைப் பொறுத்தவரை அவர்கள் ஆண்களைச் சார்ந்து வாழ்பவர்களாகவே கருதப்படுகின்றனர்.

கல்வி நிலையங்களில் இருக்கும் பெண்களிடம் நீங்கள் படித்து என்னவாக விரும்புகிறீர்கள் என்கிற கேள்வியை முன்வைக்கும்போது, யாரும் தான் ஒரு நல்ல அம்மாவாகவோ, மனைவியாகவோ ஆக விரும்புவதாகக் குறிப்பிடுவதில்லை. தனக்கென ஓர் அடையாளத்தைத் தேடிச் செல்லும் ஒரு பயணமாகவே அவர்கள் வாழ்க்கையை எதிர்கொள்கின்றனர். ஆயிரம் தடைகளைக் கடந்து அடையும் அந்த அடையாளத்தையும் கருத்தில் கொள்ளாமல் ஆண்களைச் சார்ந்து மட்டுமே அடையாளப்படுத்துவது முற்று முழுதாகப் பெண்களுக்குச் செய்யும் துரோகமேயன்றி வேறென்ன?

தாயிடமோ தந்தையிடமோ திருமணமான மகளைப் பற்றி விசாரிக்கும் எவரும் அந்தப் பெண் என்ன வேலை செய்கிறாள், தன் தனிப்பட்ட வாழ்க்கையை எவ்வாறு எதிர்கொள்கிறார் என்று விசாரிப்பதோ கவலைப்படுவதோ இல்லை. அந்தப் பெண்ணின் கணவர் என்ன வேலை செய்கிறார், அவருக்கு என்ன குடும்பச் சொத்து உள்ளது என்பதை வைத்தே அந்தப் பெண்ணின் வாழ்க்கை நிலை புரிந்துகொள்ளப் படுகிறது.

இன்னும் சொல்லப்போனால் பெண்களின் நடை, உடை, பாவனை இப்படி எல்லா விஷயத்தையும்கூட இற்றுப்போன சில பழம் பெருமைகள் தீர்மானிக்கின்றன. இந்தக் குடும்பத்து மருமகள் யாரும் இவ்விதம் உடை அணியக்கூடாது என்று கட்டுப்பாடுகள் விதிக்கப்படுகின்றன. மொத்தமாகவே அந்தப் பெண் யார், அவரது தனிப்பட்ட அடையாளம் என்ன என்பதெல்லாம் துடைத்தெடுக்கப் பட்டு, அவர் அந்தக் குடும்பத்தின் மருமகளாக மட்டுமே அறியப்படுவார். ஆரம்பத்தில் மிகவும் பெருமையாக இருக்கும் இந்த அடையாளம், போகப் போக எதற்கும் உதவாது என்று தெரியும்போது பெண்கள் தங்களைக் கட்டியுள்ள இந்தப் பழம் பெருமை சங்கிலிகளுக்குப் பழக்கப்பட்டுப் போயிருப்பார்கள். வாய்ப்புக் கிடைக்கும் போது தவறாமல் அதே சங்கிலியை அந்தக் குடும்பத்தின் புது வரவுப் பெண்களுக்கும் அணிவிப்பார்கள். தன் கணவர் மற்றும் குடும்ப உறுப்பினர்களின் தேவை அனைத்தையும் கருத்தில் கொண்டு, அவர்களுக்காக உடல் ஆரோக்கியத்தைப் பணயம் வைத்துச் செய்யும் எந்தச் செயலும் பெண்களுக்கான எந்தவொரு தனிப்பட்ட அடையாளத்தையும் பெற்றுத் தருவதில்லை. 'தியாகத்தின் உருவமே எங்கள் அம்மா' என்று பிள்ளைகள் மதர்ஸ் டே அன்று ஸ்டேடஸ் போடுவதைக் கண்டு புல்லரித்துப் போவதில் எந்தப் பயனும் இல்லை. சமூகம் கற்பித்து வைத்திருக்கும் அடையாளத்தைக் கொண்டே பெண்கள் பொது வெளியில் பார்க்கப்படுகிறார்கள். அந்த அடையாளம் சமூகப் படிநிலையில் கீழானவர்களாகவும், சார்பு உடையவர்களாகவும், தனித்து இயங்க திறன் அற்றவர்களாகவும்தான் பெண்களை உருவகிக்கிறது. பெண்கள் இதை உணரும் தருணம்தான் தங்கள் உண்மையான அடையாளத்தை நோக்கி நகரும் தருணம்.

தனக்கான அடையாளத்தை நோக்கி ஒவ்வோர் அடி எடுத்து வைக்கும்போதும் பெண்கள் பல முறை வீழ்த்தப் படுவார்கள். பெண்களின் திறமையும், வலிமையும், துணிவும் எப்போதும் கேள்விக்கு உள்ளாக்கப் படும். இவை அனைத்தையும் புறந்தள்ளிவிட்டு தன் னம்பிக்கையுடன் நகரும்போது வலுவான சுதந்திரமான பெண்களாக உருவெடுக்கிறார்கள்.

1966இல் சீனாவில் பிறந்த ஜெங் ஜியாங் 16 வயதிலேயே சீன தேசிய அணிக்காக டேபிள் டென்னிஸ் விளையாடியவர். ஒலிம்பிக்கில் விளையாட வேண்டும் என்கிற கனவு 20 வயதில் தகர்ந்து போகிறது. சிலி நாட்டில் பள்ளிக் குழந்தைகளுக்கு டேபிள் டென்னிஸ் கோச்சாக அழைப்பு வர, 1986இல் சிலி நாட்டில் குடியேறினார். சில வருடங்களுக்குப் பிறகு, குடும்பம், குழந்தைகள் சொந்தத் தொழில் என்று கவனம் செலுத்தத் தொடங்க, டேபிள் டென்னிஸ் கனவு காணாமல் போனது. மீண்டும், கொரோனா ஊரடங்கு காலத்தில் விளையாட ஆரம்பிக்க, 58 வயதில் சிலி நாட்டின் சார்பாக பாரீஸ் ஒலிம்பிக்கில் பங்கேற்றார். முதல் சுற்றிலேயே தோல்வி அடைந்தாலும், ஒலிம்பிக் வீராங்கனையாக வேண்டும் என்கிற அவரது சிறு வயது கனவு 58 வயதில் நிறைவேறி இருக்கிறது.

பெண்கள் தங்கள் அடையாளத்தைத் தங்களுக்குத் தாங்களே உருவாக்கும்போது, அது தனித்துவம் பெற்றதாகவும், தன் சுய முயற்சியில் உருவானதாகவும் பெருமைக்குரியதாக மாறுகிறது. நீங்கள் எதையும் நிரூபிக்க வேண்டிய ஒரே நபர் உங்களுக்கு மட்டுமே! வேறு யாருக்கும் அல்ல.

# சட்டவிரோத குடியேற்றத்தை தடுப்பதே முதல் நோக்கம் டிரம்ப் திட்டவட்டம்



சட்டவிரோத குடியேற்றத்தை தடுப்பதே முதல் நோக்கம் என அமெரிக்கா அதிபர் டொனால்டு டிரம்ப் தெரிவித்துள்ளார்.

உக்ரைன் மீதான ரஷ்யாவின் தாக்குதலை முடிவுக்கு கொண்டு வர அமெரிக்காவின் வெள்ளை மாளிகையில் நடந்த பேச்சுவார்த்தை தோல்வியில் முடிந்தது. டிரம்ப் - ஜெலன்ஸ்கி இடையே கடும் வாக்குவாதம் ஏற்பட்டது. இதனையடுத்து ஜெலன்ஸ்கியை வெள்ளை மாளிகையில் இருந்து வெளியேறும்படி டிரம்ப் உத்தரவிட்டார். தற்போது உக்ரைனுக்கு ஐரோப்பிய நாடுகள் ஆதரவு தெரிவித்துள்ளன.

இந்நிலையில் இன்று அதிபர் டொனால்டு டிரம்ப் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது: புடினைப் பற்றி கவலைப்படுவதைக் குறைத்து, சட்டவிரோத குடியேற்றங்கள், வன்கொடுமை சம்பவங்கள், போதைப்பொருள் மற்றும் கொலைகாரர்கள் நம் நாட்டிற்குள் நுழைவதைப் பற்றி அதிக நேரம் கவலைப்பட வேண்டும்.

டிரம்பின் ஆதரவு முக்கியமானது் உக்ரைன் அதிபர் ஜெலன்ஸ்கி திடீர் மனமாற்றம்!

சட்டவிரோத குடியேற்றத்தை தடுப்பதே முதல் நோக்கம். இவ்வாறு டொனால்டு டிரம்ப் கூறியுள்ளார்.

மற்றொரு பதிவில் டிரம்ப் கூறியதாவது: நான் பதவியேற்ற முதல் ஒரு மாதத்திற்குள் சட்டவிரோத குடியேறிகளின் எண்ணிக்கையை வரலாற்றுச் சிறப்புமிக்க அளவிற்குக் குறைக்க முடிந்தது.

நமது நாட்டின் மீதான படையெடுப்பு முடிந்துவிட்டது. அமெரிக்க - மெக்சிகோ எல்லையில் எல்லை ரோந்துப் படையினரால் 8,326 சட்டவிரோத குடியேறிகள் மீது மட்டுமே வழக்குத் தொடரப்பட்டது. அவர்கள் அனைவரும் விரைவாக நம் நாட்டிலிருந்து வெளியேற்றப்பட்டனர். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார். (ஐ)

## அமைதியைக் கொண்டு வருவதில் ஐரோப்பிய தலைவர்கள் ஒற்றுமை் நன்றி சொல்கிறார் உக்ரைன் அதிபர்!



அமைதியைக் கொண்டு வருவதில் எங்கள் அனைத்து நண்பர்கள் மற்றும் கூட்டாளர்களின் முயற்சிகளுக்கு நன்றி உள்ளவனாக இருப்பேன்' என உக்ரைன் அதிபர் ஜெலன்ஸ்கி தெரிவித்தார்.

அமெரிக்க அதிபர் டொனால்டு டிரம்ப், உக்ரைன் அதிபர் ஜெலன்ஸ்கி இடையே வெள்ளை மாளிகையில் நடந்த பேச்சுவார்த்தையின் போது வாக்குவாதம் ஏற்பட்டது. டிரம்பால் அவமதிக்கப்பட்டதாக கருதப்படும் ஜெலன்ஸ்கிக்கு ஆறுதலாக ஐரோப்பிய நாடுகள் கைகோர்த்துள்ளன .(ஐ)

## 5 பிரிவுகளில் ஆஸ்கர் விருது வென்ற 'அனோரா'



அமெரிக்காவின் லாஸ் ஏஞ்சல்ஸ் நகரில் நடந்த ஆஸ்கர் விருது வழங்கும் விழாவில், 'அனோரா' திரைப்படம் 5 விருதுகளை வென்றது. சிறந்த படத தொகுப்பு, திரைக்கதை, திரைப்படம், இயக்குனர், நடிகை என முக்கிய பிரிவுகளில் விருதுகளை வென்று அசத்தி உள்ளது.

2025ம் ஆண்டுக்கான 97வது ஆஸ்கர் விருது வழங்கும் விழா லாஸ் ஏஸ்சல்ஸ் நகரில் கோலாகலமாக நடைபெற்றது. அப்போது விருது பெற்றவர்கள் விபரம் பின்வருமாறு:

- நடிகர் கீரன் கல்கின் சிறந்த துணை நடிகருக்கான ஆஸ்கர் விருதை வென்றார்.
- ஜெஸ்ஸி ஐசன்பெர்க் இயக்கிய எ ரியல் பெயின் படத்திற்காக நடிகர் கீரன் கல்கின் சிறந்த துணை நடிகருக்கான விருதை வென்றார்.
- சிறந்த நடிகருக்கான விருதை 'தி புரூட்டலிஸ்ட்' படத்தில் நடித்த அட்ரியன் பிராடி வென்றார்.
- சிறந்த நடிகைக்கான விருதை 'அனோரா' படத்தில் நடித்த மிக்கி மேடிசன் வென்றார்.
- சிறந்த ஒளிப்பதிவுக்கான விருதை 'தி புரூட்டலிஸ்ட்' படம் வென்றது.
- சிறந்த சர்வதேச படங்களுக்கான பிரிவில், 'ஐயாம் ஸ்டில் ஹியர்' படம் வென்றது.
- சிறந்த அனிமேஷன் படத்திற்கான ஆஸ்கர் விருதை 'குடுமுறு' வென்றது.
- சிறந்த அனிமேஷன் படத்திற்கான ஆஸ்கர் விருதை **'IN THE SHADOW OF CYPRESS'** வென்றது.
- சிறந்த ஆடை வடிவமைப்பாளருக்கான ஆஸ்கர் விருதை 'றுஉைமுநன' திரைப்படத்திற்காக **Paul Tazewell** வென்றார். இதன் மூலம், கறுப்பினத்தைச் சேர்ந்த ஒருவர் முதன்முறையாக ஆஸ்கர் விருது வென்றுள்ளார் என்ற பெருமையை பெற்றுள்ளார்.

## பிரார்த்தனைகளுக்கு நன்றி தெரிவித்தார் போப் பிரான்சிஸ்



தனக்காக பிரார்த்தனை செய்த அனைவருக்கும்நன்றி தெரிவிக்க விரும்புகிறேன் என்று போப் பிரான்சிஸ் தெரிவித்துள்ளார்.

போப் பிரான்சிஸ், 88 ,பிப்ரவரி 14 அன்று ரோமின் ஜெமெல்லி மருத்துவமனையில் சுவாசக் கோளாறுகளுடன் அனுமதிக்கப்பட்டார், அவருக்க இரட்டை நிமோனியா என்று சொல்லப்பட்டது. இரு நுரையீரல்களிலும் கடுமையான தொற்றால் அவருக்கு சுவாசிக்க கடினமாக இருந்தது.

17வது நாளாக மருத்துவமனையில் நிமோனியாவால் போராடி வரும் போப் பிரான்சிசை இன்று இரண்டு வாடிகன் அதிகாரிகள் சந்தித்தனர். அவர்களிடம் தனக்காக பிரார்த்தனை செய்த அனைவருக்கும் போப் நன்றி தெரிவித்தார்.

போப் பிரான்சிஸ் உடல்நிலை குறித்து வாடிகன் செய்தித் தொடர்பாளர் மேட்டியோ புருனி கூறியதாவது:

மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் போப் பிரான்சிஸிற்கு ரத்த ஓட்டம் சீராக உள்ளது. வெள்ளை ரத்த அணுக்களின் எண்ணிக்கையில் எந்த அதிகரிப்பும் இல்லை.

போப் இரவு நேரத்தை அமைதியாக கடந்துவிட்டார். சுவாச பிரச்னைகள் எதுவும் ஏற்படவில்லை.

போப் பிரான்சிஸ், ஒவ்வொரு ஞாயிறு அன்றும் சிறப்பு பிரார்த்தனை செய்வது வழக்கம். அவருக்கு உடல்நிலை சரியில்லாத நிலையில் 3 வாரமாக வழிநடத்த முடியவில்லை. இந்த நிலையில் தான் இன்று வாடிகனில் 2வது அதிகாரியும், பரோலின் துணைவருமான கார்டினல் பியட்ரோ பரோலினை, மருத்துவமனையில் அவரை சந்தித்தனர். அப்போது அவர், உங்கள் அனைவரின் பாசத்தையும், நெருககத்தையும், நான் உணர்கிறேன். கடவுளின் அனைத்து மக்களாலும் ஆதரிக்கப்படுவது போல் உணர்கிேறன் என்று கூறியுள்ளார். இவ்வாறு மெட்டியோ புருனி கூறினார்.

(ஐ)

## செம்மணி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போது மனித எச்சங்கள் வெளிவந்தன. குறித்த விடயம் தொடர்பில் யாழ்ப்பாணம் நீதிமன்றம் கவனம் செலுத்திய நிலையில் குறித்த இடத்தை நீதிபதி மற்றும் சட்ட வைத்திய அதிகாரி சென்ற பார்வையிட்டுள்ளனர்.

அதுமட்டுமல்லாது மீட்கப்பட்ட மனித எச்சங்கள் தொடர்பில் நீதிமன்றத்துக்கு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிலையில் எதிர்வரும் நாட்களில் சம்பந்தப்பட்ட தரப்பினருடன் நீதிபதி கலந்துரையாடி எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கை தொடர்பில் ஆராயவுள்ளதாக அறிந்தேன்.

ஆகவே, கடந்த காலங்களைப் போன்று நீதிமன்ற விவகாரத்தில் நாங்கள் தலையிடப் போவதில்லை. அரசு என்ற வகையில் நீதித்துறையின் செயற்பாடுகளுக்குப் பூரண ஒத்துழைப்பை வழங்குவோம்..” - என்றார்.

## 197...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கைது செய்யப்பட்டவர்கள் மன்னார் மற்றும் காரைநகர் பகுதிகளைச் சேர்ந்தவர்கள் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

அனலைதீவுக்கும், எழுவைதீவுக்கும் இடைப்பட்ட கடற்பகுதியில் சந்தேகத்துக்கிடமான முறையில் பயணித்த படகை, கடல் சுற்றுக்காவல் பணியில் ஈடுபட்டிருந்த கடற்படையினர் கண்டு படகை வழி மறித்து சோதனையிட்டனர்

அதன்போது படகில் இருந்து 197 கிலோ 400 கிராம் கஞ்சாவை மீட்டனர். அதனையடுத்து படகில் இருந்த இருவரையும் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட இருவரையும், மீட்கப்பட்ட கஞ்சா மற்றும், கடத்தலுக்கு பயன்படுத்தப்பட்ட படகு என்பவற்றை மேலதிக சட்ட நடவடிக்கைக்காக ஊர்காவற்றுறைப் பொலிஸாரிடம் கடற்படையினர் ஒப்படைத்துள்ளனர்.

## மார்ச்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காலை 8.30 மணி முதல் மாலை 4.15 மணிவரை வேட்புமனுக்களை தாக்கல் செய்ய முடியும். 20 ஆம் திகதி நண்பகல் 12 மணிக்குள் தாக்கல் செய்ய வேண்டும்.

ஏப்ரல் இறுதியில் அல்லது மே முதல் வாரத்தில் தேர்தல் நடத்தப்படக்கூடும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

நீதியாகவும், நியாயமாகவும் தேர்தலை நடத்தி முடிப்பதற்குத் தேர்தல் ஆணைக்குழு, பொலிஸார் உள்ளிட்ட தரப்பினருக்கு முழுமையான ஒத்துழைப்பு வழங்கப்படும் என அரசு ஏற்கனவே அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## இன்று....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எனினும், 8,9, 13, 15 மற்றும் 16 ஆம் திகதிகளில் கட்டுப்பணம் செலுத்த முடியாது என்று தேர்தல் ஆணைக்குழு மேலும் தெரிவித்துள்ளது

## மார்ச் 5 முதல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செயற்குழு அவசர கூட்டத்தின்போதே இந்தத் தீர்மானம் எட்டப்பட்டது என்று அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் பொதுச்செயலாளர் வைத்தியர் பிரபாத் சுகததாச தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியுடனான கலந்துரையாடல் நிறைவடைந்து 4 நாட்கள் கடந்துள்ள நிலையில் எவ்விதமான சாதகமான தீர்வுகளும் கிடைக்கவில்லை.

தொடர்ந்தும் அரசு தீர்வுகளை வழங்காத நிலையில் எதிர்வரும் 5 ஆம் திகதி முதல் நாடளாவிய ரீதியில் பணிப்புறக்கணிப்பில் ஈடுபடுவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் பொதுச் செயலாளர் வைத்தியர் பிரபாத் சுகததாச மேலும் குறிப்பிட்டுள்ளார்.

## தமிழரசுக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தேசியக் கூட்டணி கலந்துரையாடி முடிவெடுக்கும் என்று அந்தக் கட்சியின் இணைத் தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தன் தெரிவித்துள்ளார்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பதில் தலைவர் சி.வி.கே.சிவஞானத்துக்கு ஜனநாயகத் தமிழ்த் தேசிய கூட்டணியின் இணைத் தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தன் கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் இணைந்து போட்டியிடுவது தொடர்பில் தமது விருப்பத்தைத் தெரிவித்து சி.வி.கே.சிவஞானம் அண்மையில் கடிதம் ஒன்றை அனுப்பியிருந்தார்.

அதற்குப் பதிலளிக்கும் வகையில் இந்தக் கடிதத்தைத் தர்மலிங்கம் சித்தார்த்தன் அனுப்பியுள்ளார்.

இன நலன் குறித்து கட்டியெழுப்பப்பட வேண்டிய ஒற்றுமை பற்றி தெரிவித்துள்ள விடயங்களில் எக்காலத்திலும் தாங்கள் மாறுபட்ட கருத்தைக் கொண்டிருப்பவர்கள் அல்ல எனச் சித்தார்த்தன் அந்தக் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் அந்தக் கடிதத்தில் கூறியிருப்பதாவது:-

“உள்ளூராட்சி சபைத் தேர்தலில் சில இடங்களிலாவது ஒன்றாகப் போட்டியிடுவது பற்றி ஆராய விரும்பும் நீங்கள், தற்போது நாம் அமைத்துள்ள கூட்டணி உங்களுக்கு ஏமாற்றத்தையும் கவலையையும் அளிப்பதாகவும், உங்கள் கட்சிக்குத் தனித்துப் போட்டியிடும் சூழலை உருவாக்கியுள்ளது என்றும் குறிப்பிட்டுள்ளீர்கள்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பிளவுபட்டு தேர்தல்களைச் சந்திக்கும் நிலை கடந்த 2023ஆம் ஆண்டு அறிவிக்கப்பட்ட உள்ளூராட்சி மன்றத் தேர்தல் அறிவிப்பை அடுத்தே ஏற்பட்டது.

தனித்துப் போட்டியிட்டு பின்னர் இணைந்து ஆட்சி அமைக்கும் எண்ணக்கருவை தங்களது மத்திய குழு மட்டக்களப்பில் கூடி எடுத்தீர்கள். இதன் மூலம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை விட்டு தமிழரசுக் கட்சி வெளியேறியது.

பிரிந்து நின்று செயற்படுவதால் எதிர்காலத்தில் ஏற்படக் கூடிய பாதகமான விளைவுகளை ஆணித்தரமாக நாம் முன்வைத்தபோதும் தமிழரசுக் கட்சியின் செயல் தலைவர்கள் அதனை ஏற்றுக்கொள்ளவில்லை.

தமிழரசுக் கட்சியின் மூத்த தலைவர் மறைந்த சம்பந்தன் அண்ணரிடம் எமது நிலைப்பாட்டை நாம் நேரடியாக முன்வைத்தபோதும் கூட அவரும் தமிழரசுக் கட்சியின் முடிவை ஏற்று செயற்படுமாறு எம்மை அறிவுறுத்தினார்.

அன்று கூட்டமைப்பிலிருந்து தமிழரசுக் கட்சி வெளியேறிய பின்னர் நாமும் ரெலோ அமைப்பும் இயன்ற வரையிலும் ஏனைய தமிழ் அமைப்புகளை ஐக்கியப்படுத்தி கூட்டமைப்பாகச் செயற்படும் நோக்கில் மேலும் மூன்று அரசியல் கட்சிகளை இணைத்து கூட்டமைப்பாக பயணிக்கத் தொடங்கினோம்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினதும் அதன் அங்கத்துக் கட்சிகளினதும் தொடர்ச்சியான பிளவுகளினால் ஏற்பட்ட மோசமான விளைவுகளைக் கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ்க் கட்சிகளும் தமிழ் மக்களும் ஆழமாக உணர்ந்து கொண்டோம்.

மேலும் கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் ஐந்து கட்சிகளாக இணைந்து ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியாகப் போட்டியிட்ட நாம், நடைபெற இருக்கும் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் தமிழ்த் தேசியத்தின் இருப்புக்கு மிகவும் அவசியமான ஒற்றுமை எனும் விடயத்தை மேலும் வலுவானதாக்க சாத்தியமான வகையில் மேலும் சில அமைப்புகளை இணைத்துப் பயணிக்கத் தீர்மானித்து தொடர்ச்சியாக மேற்கொண்ட செயற்பாடுகளின் பலனாகவே இன்று பல கட்சிகள் இணைந்த கூட்டணியொன்றை உருவாக்க முடிந் துள்ளது.

நீங்கள் விரும்புவது போல், தமிழரசுக் கட்சியுடன் இந்தக் கூட்டணியும் இணைந்து செயற்படுவதன் மூலம் தமிழ்த் தேசியத்துக்கு மேலும் வலுச்சேர்க்க வேண்டும் என்பதில் நாமும் பெரு விருப்பம் கொண்டுள்ளோம்.

எனவே, எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தல் சம்பந்தமாக நடைமுறைச் சாத்தியமான வகையில் எமது கூட்டணியுடன் பேச்சுக்களை நடத்தக்கூடிய தீர்மானம் ஒன்றை தமிழரசுக் கட்சியின் மத்திய குழு மேற்கொண்டு அறியத் தருவீர்களானால் அது பற்றி ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் நிறைவேற்றுக் குழுவில் பேசி சாதகமான பதிலை தங்களுக்கு அறியத் தர முடியும் என்பதை அன்புடன் தெரிவித்துக்கொள்கின்றேன்.” - என்றுள்ளது.

# கைத்தொலைபேசியில் உரையாடியவாறு சென்ற பாடசாலை மாணவன் ரயிலில் மோதி பரிதாபப் பலி

கொழும்பு, மார்ச் 03

ரயிலில் மோதி பாடசாலை மாணவன் ஒருவர் உயிரிழந்துள்ளார் என்று அம்பலாங்கொடை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அனுராதபுரத்திலிருந்து பெலியத்த நோக்கிப் பயணித்த ரயிலில் மோதி குறித்த மாணவன் உயிரிழந்துள்ளார்.

அம்பலாங்கொடை கரித்தகந்த வாயிலுக்கும் கந்தேகொட ரயில் நிலையத்துக்கும் இடையில் 52.5 தூணுக்கு அருகில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. விபத்தில் உயிரிழந்தவர் எல்பிட்டிய, எல்ல வீதியில் வசிக்கும் 16 வயதுடைய பாடசாலை மாணவன் ஆவார்.

மேற்படி மாணவன் தனது கையடக்கத் தொலைபேசியில் உரையாடியவாறு ரயில் தண்டவாளத்தில் தனியாகப் பயணித்தார் என்றும், ரயில் ஒலி எழுப்பியும் அவருக்குச் சத்தம் கேட்கவில்லை என்றும், பின்னால் வந்த ரயில் மோதியதால் அவர் அந்த இடத்திலேயே உயிரிழந்தார் என்றும் பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

உயிரிழந்த மாணவன் ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சைக்கு இம்முறை தோற்றவிருந்தவர் என்றும் தெரியவந்துள்ளது.

## நுவரெலியா, பதுளை மாவட்டங்களுக்கு மண்சரிவு எச்சரிக்கை மேலும் நீடிப்பு

கொழும்பு, மார்ச் 03

நுவரெலியா மற்றும் பதுளை மாவட்டங்களுக்கு விடுக்கப்பட்ட முதலாம் கட்ட மண்சரிவு எச்சரிக்கை மேலும் நீட்டிக்கப்பட்டுள்ளது.

தென், கிழக்கு மற்றும் ஊவா மாகாணங்களிலும், மாத்தளை, நுவரெலியா மற்றும் பொலனறுவை மாவட்டங்களிலும் அவ்வப்போது மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும் என்றும் வளிமண்டளவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

மேலும், வடக்கு மாகாணம், அனுராதபுரம் மாவட்டத்தில் சில இடங்களில் மழை பெய்யக்கூடும் என்றும், ஏனைய பகுதிகளில் மாலை அல்லது இரவு நேரங்களில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும் என்றும் திணைக்களம் தெரிவித்துள்ளது.

# பிணையில் விடுவிக்கப்பட்ட ஜீவன் தொண்டமான்

கடந்த வருடம் ஐந்தாம் மாதம் 30 ஆம் திகதி களனி வெளி பெருந்தோட்ட யாக்கத்திற்கு உட்பட்ட பீட்ரூ தோட்ட தொழிற்சாலையில் அத்துமீறி நுழைந்ததாக குற்றச்சாட்டப்பட்ட முன்னாள் அமைச்சர் ஜீவன் தொண்டமானுக்கு எதிராக பெருந்தோட்ட நிறுவனத்தினரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு இன்று(03) நுவரெலியா மாவட்ட நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

வழக்கில் ஜீவன் தொண்டமான் உள்ளிட்ட 10 சந்தேக நபர்களின் பெயர்கள் முன்வைக்கப்பட்டிருந்தது.

இவர்கள் இன்று நீதிமன்றில் ஆஜரான போது வழக்கு எதிர்வரும் ஜீன் மாதம் ஒன்பதாம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

அத்துடன் வழக்கில் ஆஜரான அனைவரும் ஐந்து லட்சம் ரூபா பெறுமதியான இரண்டு சரீர பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# மாடுகளை கடத்தி சென்ற மூவர் கைது

கொழும்பு, மார்ச் 03

சட்டவிரோதமான முறையில் அனுமதி பத்திரமின்றி போலியான அனுமதி பத்திரத்தை பயன்படுத்தி மாடுகளை ஏற்றி வந்த மூவரை திங்கள்கிழமை காலை (3) காத்தான்குடி பொலிஸார் கைது செய்துள்ளதாக காத்தான்குடி பொலிஸ் நிலைய சிரேஸ்ட குற்றப்பிரிவு பொறுப்பதிகாரி கே எம் இக்பால் தெரிவித்தார்

ஏறாவூரிலிருந்து காத்தான்குடி பிரதேசத்திற்கு போலியான அனுமதி பத்திரத்தைப் பயன்படுத்தி 9 மாடுகளை அடைத்து சிறிய வாகனம் ஒன்றில் அடைத்து வைத்த நிலையில் ஏற்றி வந்துள்ளதாக பொலிசார் மேலும் தெரிவிக்கின்றனர்.

குறித்த வாகனத்திலிருந்து 9 மாடுகள் உடல் பலவீனமான முறையில் மீட்கப்பட்டுள்ளன. சில மாடுகளில் காயங்களும் காணப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது. மிருகவதை சட்டத்தின் கீழ் குறித்த சந்தேக நபர்கள் மீது வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்

சந்தேக நபர்கள் மட்டக்களப்பு நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்த பொலிசார் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்

காத்தான்குடி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)







இந்நாளிதழ் நல்லூர், இல - 68, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 03.03.2025 இல் வெளியிடப்பெற்றது.